

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம் சார்பில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையத் தலைவர் மேனாள் நீதிபதி.நீதியரசர் முனைவர் ச.தமிழ்வாணன் அவர்கள் தலைமையில் 25.03.2025 அன்று கள ஆய்வுக் கூட்டம் அலுவலர்களுடன் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், துணைத்தலைவர் இமயம் (வெ.அண்ணாமலை), உறுப்பினர்கள் முனைவர் சு.ஆனந்தராஜா, பொ.இளஞ்செழியன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.மு.பாலகணேஷ் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### 100 நாள் வேலைத் திட்டத்திற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



*பெரம்பலூர், மார்ச் 29 -*

100 நாள் வேலைத் திற்கு தமிழ்நாட்டிற்கு நிதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கை விபரம் வருமாறு,

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் 100 நாள் வேலை திட்டத்தில் பொதுமக்கள் பயன் பெற்று வருகின்றனர். ஏற்கனவே பல்வேறு திட்டங்களுக்கு நிதி வழங்காமல் ஒன்றிய பா.ஜ.க.அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.

இந்நிலையில் தற்போது 100 நாள் வேலை திட்டத்திற்கும் நிதி வழங்காமல் துரோகம் செய்யும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., வழிகாட்டுதல்படி, போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கிணங்க, சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண் ஆகியோர் முன்னிலையில், பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (29.03.2025-சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு கீழ்க்கண்ட இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

பெரம்பலூர் ஒன்றியம் எளம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், வேப்பூர் தெற்கு ஒன்றியம் குன்னம் பா.துரைசாமி, மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் வேப்பூர் வடக்கு ஒன்றியம் அகரம்சீகூர். செ.ரவிச்சந்திரன்,

மாவட்டக் கழக பொருளாளர் ஆலத்தூர் கிழக்கு ஒன்றியம் கொளக்காநத்தம் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்ஆலத்தூர் மேற்கு ஒன்றியம் செட்டிக்குளம் என்.ராஜேந்திரன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம் கிருஷ்ணாபுரம் தழுதாழை.பாஸ்கர், மாவட்ட கழக துணைச்செயலாளர் வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றியம் வேப்பந்தட்டை செ. அண்ணாதுரை பொதுக்குழு உறுப்பினர்.

மேற்கண்ட இடங்களில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள், பொதுமக்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும், அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தை சிறப்பாக நடத்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (27.03.2025) கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான வரைவு கொள்கை விளக்க குறிப்பு, அறிவிப்புகள் மற்றும் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் அரசு துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் க. நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) எஸ்.பி அம்ரித், கூடுதல் பதிவாளர்கள், இணைப்பதிவாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதப் போக்கைக் கண்டித்து இளைஞர் அணியின் சார்பில் திருத்துறைப்பூண்டி தொகுதி மடப்புரம் கலைஞர் திடலில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில், தலைமைக் கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு மாநில துணைச் செயலாளர் மதுரை எஸ்.பாலா உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் , மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், தொகுதி பொறுப்பாளர் எம்.வி.காமராஜ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எஸ். குமார் உட்பட ஒன்றிய நகர,பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர்கள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.


### 100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!



100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.சு அரசைக் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அனைத்து கழக ஒன்றியங்களிலும் 29.03.2025 சனிக்கிழமை காலை 09.30 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.

| வ.எ | ஒன்றியம் | ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | பொன்னமராவதி வடக்கு | காரையூர் |
| 2. | பொன்னமராவதி தெற்கு | பொன்னமராவதி பேருந்து நிலையம் அருகில் |
| 3. | திருமயம் வடக்கு | பனையப்பட்டி |
| 4. | திருமயம் தெற்கு | திருமயம் தாலுகா அலுவலகம் அருகில் |
| 5. | அரிமளம் வடக்கு | அரிமளம் |
| 6. | அரிமளம் தெற்கு | கே.புதுப்பட்டி |
| 7. | அறந்தாங்கி தெற்கு | நாகுடி |
| 8. | ஆவுடையார்கோவில் வடக்கு | ஆவுடையார்கோவில் |
| 9. | ஆவுடையார்கோவில் தெற்கு | கரூர் |
| 10. | மணமேல்குடி வடக்கு | மணமேல்குடி |
| 11. | மணமேல்குடி தெற்கு | கோட்டைப்பட்டினம் |
| 12. | அறந்தாங்கி கிழக்கு | அரசர்குளம் கீழ்பாதி |
| 13. | அறந்தாங்கி மேற்கு | குரூம்பூர் ஒத்தக்கடை |
| 14. | திருவரங்குளம் கிழக்கு | கொத்தமங்கலம் |
| 15. | திருவரங்குளம் மேற்கு | வம்பன் நாலு ரோடு |
| 16. | திருவரங்குளம் தெற்கு | திருவரங்குளம் |

இதில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் முன்னாள் / இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், செயல்வீரர்கள், மாவட்ட, ஒன்றிய, கிளை அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எஸ்.ரகுபதி**
செயலாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க.



### 100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்ட பொறுப்பாளர் – செஞ்சி கே.எஸ்.மஸ்தான் MLA., அறிவிப்பு!



தி.மு.க,தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அறிக்கை வருமாறு: 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் 29.3.2025 சனிக்கிழமை இன்று காலை 10.00 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட வேண்டும் என்று தலைமை கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றியங்களில் கண்டன பொதுக்கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது.

| கழக நிர்வாகம் | தலைமை | முன்னிலை |
|---|---|---|
| **செஞ்சி ஒன்றியம்,** நரசிங்கராயன் பேட்டை, ஆலம்பூண்டி ஊராட்சிகள். | திரு.**செஞ்சி கே.எஸ்.மஸ்தான்** விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் | திரு.R.விஜயகுமார் B.A.,B.L., ஒ.செ<br>திரு.M.விஜயராகவன் ஒ.செ<br>திரு.B.K.பச்சையப்பன் B.Sc., ஒ.செ<br>திரு.D.A.மணிவண்ணன் B.A.,B.L., பொ.கு<br>திரு.க.ஆனந்த் B.E., மா.இ.அ |
| **மேல்மலையனூர் ஒன்றியம்,** வளத்தி, அவலூர்பேட்டை ஊராட்சிகள். | திரு.பா.செந்தமிழ்ச்செல்வன் M.A., மாநில விவசாய அணி இணை செயலாளர் | திரு.L.P.நெடுஞ்செழியன் B.A.,B.L., ஒ.செ<br>திரு.P.செல்வராஜ் M.Com., பொ.கு<br>திருமதி.கண்மணிநெடுஞ்செழியன் ஒ.கு.த<br>திரு.M.P.நாராயணமூர்த்தி B.E., ஒ.செ<br>திருமதி.சாந்திசுப்பிரமணியன் ஒ.செ |
| **மயிலம் ஒன்றியம்,** கூட்டேரிப்பட்டு, தீவனூர் ஊராட்சிகள். | டாக்டர்.R.மாசிலாமணி MBBS., தலைமை தீர்மானக்குழு துணை தலைவர் | திரு.இரா.சேதுநாதன் B.A.,B.L.,ஒ.செ<br>திரு.S.அருணகிரி B.A.,B.L., மா.து.செ<br>திருமதி.யோகேஸ்வரி மணிமாறன் ஒ.கு.த<br>திரு.V.மணிமாறன் ஒ.செ<br>திரு.G.செழியன் ஒ.செ<br>திரு.M.வீடுர் ரவி பொ.கு |
| **வல்லம் ஒன்றியம்,** நாட்டார்மங்கலம், திருவம்பட்டு ஊராட்சிகள். | திரு.செஞ்சி சிவா B.B.A., தலைமை தீர்மானகுழு உறுப்பினர் | திரு.அ.சீ.அண்ணாதுரை B.Sc., ஒ.செ<br>திரு.பெ.துரை B.Sc.,ஒ.செ<br>திரு.R.இளம்வழுதி ஒ.செ<br>திருமதி.அமுதாரவிக்குமார் மா.து.செ |
| **ஒலக்கூர் ஒன்றியம்,** ஆவணிப்பூர் ஊராட்சி. | திருமதி.சீத்தாபதி சொக்கலிங்கம் B.Sc.B.Ed., மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் | திரு.G.சொக்கலிங்கம் ஒ.செ<br>திரு.N.ரமணன் B.A.,B.L., மா.பொ<br>திரு.ஆசிரியர் கண்ணன் ந.செ<br>திரு.சீனி.சின்னராஜ் செ.கு.உ |
| **ஒலக்கூர் ஒன்றியம்,** தாதபுரம் ஊராட்சி. | டாக்டர்.ப.சேகர் MBBS., மாவட்ட அவைத்தலைவர் | திரு.A.ராஜாராம் ஒ.செ<br>திரு.சாந்தி ஏழுமலை பொ.கு.<br>திரு..V.கதிரேசன் பொ.கு. |
| **மரக்காணம் ஒன்றியம்,** மானூர், சிறுவாடி, கீழ்புத்துப்பட்டு ஊராட்சிகள். | திரு.A.ரவிக்குமார் மாவட்ட துணை செயலாளர் | திரு.R.தயாளன் ஒ.செ<br>திரு.A.பழனி ஒ.செ<br>திரு.V.ரவிச்சந்திரன் ஒ.செ<br>திரு.K.பாலகிருஷ்ணன் பொ.கு |

**திரு.செஞ்சி கே.எஸ்.மஸ்தான் MLA.,**
விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்